**R 3428 (page 278)** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தீர்க்கதரிசியாகிய எலிசா

## ELISHA THE PROPHET.

### 2 இராஜாக்கள் 2:12-24

எரிகோ செழிப்பான ஒரு பட்டணமாகக் காணப்பட்டது; அதன் இடம் காணப்படும் அமைப்பும் அநுகூலமானதாகவே காணப்பட்டது; ஆனாலும் தண்ணீர் ஆதாரம் மட்டும் மிகவும் குறைவுபட்ட நிலையில் காணப்பட்டது. பட்டணத்திற்குத் தண்ணீர் வழங்கும் நீரூற்றானது உவர் நீராகக் காணப்பட்டது; இதில் காணப்பட்ட சில கனிமங்களானது, இத்தண்ணீர் பாய்ந்த இடங்களில், நிலத்தின் விளைச்சல் முதிர்வதற்கு முன்னதாக உதிர்ந்துபோகப் பண்ணினதால், நிலங்களானது அதன் பலன்களை முதிர்ச்சிக்குள் கொண்டுவர முடியவில்லை. எரிகோ என்ற பெயரின் அர்த்தம் "அவரது சந்திரன்" அல்லது "மாதம்" ஆகும்; இது, சந்திரன் இஸ்ரயேலுக்கு அடையாளமாய் இருப்பதையும், சூரியன் வேதவாக்கியங்களில் சுவிசேஷ யுக சபைக்கு அடையாளமாய் இருப்பதையும் நமக்கு நினைப்பூட்டுகின்றது; இது அநேகமாக, எரிகோவின் ஜனங்கள் மாம்சீக இஸ்ரயேலரை அடையாளப்படுத்துகின்றனர் என்பதையும், இவர்களே பூரணத்திற்குத் திரும்பிகொண்டுவரப்பட்டுள்ள வகுப்பாரை (முற்பிதாக்களை) முதலாவது அடையாளம் கண்டுகொண்டு, பரலோக இராஜ்யமாகிய மகிமையடைந்த சபையின் வழிகாட்டுதல்கீழ் ஆளுகைசெய்யும் அந்தப் பூர்வகாலத்து பாத்திரவான்களை, விடுதலைக்காக நோக்கிப்பார்ப்பார்கள் என்ற உண்மையையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக மாம்சீக இஸ்ரயேலர்கள் கனிக்கொணர முயன்றுகொண்டிருந்தும், அவர்களால் கனிகொணர முடியவில்லை என்று காண்கின்றோம். அந்த ஜனங்கள் உண்மையில் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டுதான் இருந்திருக்கின்றனர்; மேலும் கீழ்ப்படிதல், ஆராதனை, பயபக்தி முதலான கனிகளைக்கொணர முயன்றிருக்கின்றனர்; எனினும் எந்தக் கனிகளையும் அவர்களால் முழுமைக்குக் கொண்டுவர முடியவில்லை, காரணம் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளானது தேவனுடைய பார்வையில் ஒருவனையும் நீதிமானாக்குகிறதில்லை. உவர் நீரினால் அடையாளப்படுத்தப்படும் நியாயப்பிரமாணமானது நீதியானதும், பூரணமானதும், நல்லதுமாகும்; எனினும் அந்த ஜனங்களுக்கு அது ஆசீர்வாதமாகக் காணப்படுவதற்கு அவசியமான ஏதோ ஒன்றில் குறைவுப்பட்டிருந்தது. அந்த ஒன்று என்னவெனில் . . . நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதில் உள்ள கிறிஸ்துவின் வேலையாகும்; இந்த நியாயப்பிரமாணத்தைச் சார்ந்து இருந்தவர்களிடமிருந்துள்ள இதன் சாபத்தை அல்லது ஆக்கினையைக் கிறிஸ்துவின் பணியானது அகற்றிவிடும்.

இக்கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், எரிகோவின் மனுஷர் எலிசாவிடம் வேண்டிக்கொள்ளும் காரியமானது, முற்பிதாக்களிடம் யூதர்கள் வேண்டிக்கொள்ளும் காரியத்தை அடையாளப்படுத்துகின்றது; அதாவது யூத ஜனங்களாகிய தங்கள்மீது ஏன் நீண்டகாலமாகத் தீமை காணப்படுகின்றது என்றும், தாங்கள் கர்த்தருடைய முழுமையான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகத் தங்களது பிரச்சனையை சரிசெய்வதற்கு என்ன செய்யவேண்டும் என்றும் அறியும்படிக்கு யூதர்கள் முற்பிதாக்களிடம் வேண்டிக்கொள்வார்கள். எரிகோ பட்டணத்து ஜனங்களின் வேண்டுதல் கேட்கப்பட்டதுபோன்று, இஸ்ரயேலின் வேண்டுகோளும் கேட்டுக்கொள்ளப்படும்; ஏனெனில் (திரும்பக்கொடுத்தலின் எலிசாவாகிய) முற்பிதாக்கள் உப்புள்ள புதிய மண்பாண்டத்தை எடுத்துக்கொள்வார்கள் - இது (நீங்களே பூமிக்கு உப்பாயிருக்கின்றீர்கள் என்ற) மகிமையடைந்த ஆவிக்குரிய இஸ்ரயேலர் மற்றும் கிறிஸ்து தொடர்புடைய புதிய கண்ணோட்டங்களை, புதிய நிபந்தனைகளை, புதிய ஒழுங்கமைப்புகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இஸ்ரயேலுடைய பிரமாணத்தின் மீதான இந்தப் புதிய கட்டமைப்பும், இதன் செயல்பாடும், போதனையும் மற்றும் இதன் உண்மையான முக்கியத்துவம், நிறைவேறுதல் முதலானவைகளின் வெளிப்பாடுகளும், இந்த அறிவையும், சொஸ்தமளிக்கும் ஆசீர்வாதத்தையும் வாஞ்சிப்பவர்களுக்கு விலையேறப்பெற்றதாகக் காணப்படும்; ஆகவே இஸ்ரயேலுக்கு இப்பிரமாணமானது புது அர்த்தத்தை உடையதாகக் காணப்படும்; மேலும், அவர்களுடைய இருதயங்களில் கர்த்தர் அங்கீகரிக்கும் கனிகளைக் கொணரும்; இப்பிரமாணத்துடன் தொடர்புடையவரென மீட்பரை ஏற்றுக்கொண்டு, அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிய நாடுபவர்கள், இந்த நியாயப்பிரமாணத்தின் நீதியை அடைந்தவர்களெனப் பார்க்கப்படுவார்கள்.

இதைத் தொடர்ந்து எலிசா பெத்தேலுக்குப் போகிற வழியில், பிள்ளைகள் வந்து, அவரைப் பார்த்து: "மொட்டைத்தலையா ஏறிப்போ" என்று சொல்லி நிந்தித்தார்கள். "மொட்டைத்தலையா" எனும் வார்த்தையானது அந்தக் காலக்கட்டத்தில் அவதூறான அடைமொழியாகக் காணப்பட்டதெனச் சிலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது; அதுவும் இந்தப் பிள்ளைகள், தண்ணீர்கள் சொஸ்தப்படுத்தப்பட்ட பட்டணத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்; இது நிழலாகக் காணப்படுமானால், இது மாம்சீக இஸ்ரயேல் ஜனங்களின் மத்தியில் சிலர் புதிய சூழ்நிலைகளைப் பாராட்டி போற்றுவார்கள் மற்றும் சிலர் அதை இழிவாய்க் கருதி அசட்டைப்பண்ணுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய்க் காணப்படும். "அப்பொழுது அவன் திரும்பி அவர்களைப் பார்த்து: கர்த்தரின் நாமத்திலே அவர்களைச் சபித்தான்; உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து, அவர்களில் நாற்பத்திரண்டு பிள்ளைகளைப் பீறிப்போட்டது." (2 இராஜாக்கள் 2:24). சொல்லர்த்தமான சம்பவத்தைப் பொருத்தமட்டில், இது அந்தப் பிள்ளைகளுக்கும், தங்கள் பிள்ளைகளுக்குச் சரியாய்க் கற்பிக்காததன் காரணமாய் அல்லது கற்பிக்கத் தவறினதன் காரணமாய்த் தங்களது கடமையில் தவறிப்போனவர்களாகிய அப்பிள்ளைகளின் பெற்றோர்களுக்கும், "கர்த்தருடைய பிரதிநிதிகளை மதிப்பதன் மூலம் கர்த்தரை மதிப்பது" தொடர்புடைய பாடத்தைக் கற்பித்துக்கொடுத்ததாய் இருந்தது. ஒருவேளை இச்சம்பவம் தீர்க்கத்தரிசனமான, அடையாளமான விதத்தில் பார்க்கப்பட்டால், இது எதிர்காலத்தில் இராஜ்யத்தின் பூமிக்குரிய பிரதிநிதிகளின் போதனைகளை அலட்சியம்பண்ணுபவர்கள்மீது அல்லது பரலோக இராஜ்யத்தின் தெரிந்துகொள்ளப்பட்ட பிரதிநிதிகளென, இவர்களுடைய ஸ்தானத்திற்கேயுரிய மரியாதையை வழங்கத் தவறுபவர்கள்மீது வரும் நியாயத்தீர்ப்புகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கும்.

---